## தீவனப் பயிர்கள் சாகுபடி குறிப்புகள் (ஏக்கருக்கு) (அடி உரமாக ஏக்கருக்கு 10 டன் தொழு உரம் இடவேண்டும்)

| வ எண். | பயிர் / இரகம் | விதையளவு (கிலோ) | இடைவெளி (செ.மீ) | அடியுரம் (கிலோ) | | | மேலும் தழைச் சத்து (கிலோ)* | அறுவடை நாட்கள் (முதல் / அடுத்தது) | பசுந்தீவன மகசூல் (டன்) | சத்துக்கள் (%) | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | தழைச் சத்து | மணிச் சத்து | சாம்பல் சத்து | | | | மாவுச் சத்து | புரதச்சத்து சத்து |
| | **தானிய வகை** | | | | | | | | | | |
| 1. | தீவனச் சோளம் (கோ-29 கோ-31) | 2-4 | 45 X 30 | 18 | 16 | 16 | 18 | 70/50 | 70/ வருடம் | 41 | 8.5 |
| 2. | தீவனச் சோளம் (கோ-27) | 16 | 30 X 10 | 12 | 16 | 8 | 12 | 60-65 | 15 | 41 | 8.0 |
| 3. | தீவன மக்காச்சோளம் (ஆப்ரிக்கன் நெட்டை) | 16 | 30 X 15 | 12 | 16 | 8 | 12 | 65-70 | 20 | 52 | 8.2 |
| 4. | தீவனக் கம்பு (கோ-8) | 4-5 | 30 X 10 | 10 | 8 | 5 | 10 | 50-55 | 12 | 50 | 11 |
| | **புல் வகை** | | | | | | | | | | |
| 1. | கம்பு நேப்பியர் புல் (கோ-4, கோ-5) | 12000 கரணை | 60 X 60 | 30 | 20 | 16 | 30 | 75/45 | 150 / வருடம் | 43 | 10 |
| 2. | கினியாப்புல் கோ (ஜி.ஜி) 3 | 1 கிலோ (அ) 16000 வேர்க்கரணை | 50 X 50 | 20 | 20 | 16 | 20 | 75/45 | 130 / வருடம் | 42 | 9-10 |
| 3. | எருமைப்புல் / நீர்ப்புல் | 1600 | 50 X 30 | 8 | 15 | - | 8 | 75/45 | 60-75 / வருடம் | 46 | 11 |
| 4. | நிலக் கொழுக்கட்டை புல் (கோ-1) | 3.5 | 50 X 30 | 10 | 16 | 8 | 10 | 70/65 | 16 / வருடம் | 41 | 9 |
| | **பயறு வகை** | | | | | | | | | | |
| 1. | குதிரை மசால் (கோ-2) | 6-8 | 30 X தொடர்ச்சி | 10 | 40 | 16 | - | 60/30 | 35 / வருடம் | 37 | 20-24 |
| 2. | வேலிமசால் | 8 கிலோ | 50 X தொடர்ச்சி | 10 | 16 | 8 | - | 80/45 | 50 / வருடம் | 54 | 20-25 |
| 3. | முயல்மசால் | 4 கிலோ | 30 X 15 | 8 | 24 | 6 | - | 75/60 | 12-15 / வருடம் | 42 | 22 |
| 4. | தட்டைப்பயறு (கோ.எப்.சி.8) | 10 கிலோ | 30 X 15 | 10 | 16 | 8 | - | 50/55 | 10 - 12 டன் | 36 | 21 |
| | **மர வகை** | | | | | | | | | | |
| 1. | சூபா புல் (புதிய சவுண்டல்) | 3.5 | 100 X 30 | 5 | 24 | 12 | - | 120/60 | 40 / வருடம் | 35 | 26 |
| 2. | அகத்தி | 3 | 100 X 100 | 5 | 10 | 5 | - | 240/60 | 40 / வருடம் | 47 | 25 |
| 3. | கிளைரிசிடியா | 2 கிலோ (அ) 640 செடி | 1 X 1 மீ 2.5 X 2.5 மீ | 4 | 24 | 12 | - | 180/60 | 20 / வருடம் | - | 20-24 |

*மேலுரத்தை விதைப்பு செய்த 30-வது நாளிலும் பிறகு ஒவ்வொரு அறுவடைக்கு பிறகும் இடவும்

## கால்நடை பண்ணையத்திற்கு உகந்த தீவனப்பயிர் சாகுபடி மாதிரி
## (முக்கிய தீவனப்பயிர்களுக்கு இட ஒதுக்கீடு)

| வ. எண் | கால்நடை வகை | மொத்த பரப்பளவு | பயிர் / இரகம் | பரப்பளவு |
|---|---|---|---|---|
| 1. | மாட்டுப் பண்ணை (10+1) எண்ணிக்கை | 1 ஏக்கர் | கம்பு நேப்பியர் புல் கோ (CN) 4/5<br>தீவனச்சோளம் - CoFS29/31<br>வேலிமசால் | 40சென்ட்<br>30சென்ட்<br>30சென்ட் |
| 2. | வெள்ளாடு /செம்மறி ஆடு வளர்ப்பு (20+1 எண்ணிக்கை) | 0.5 ஏக்கர் | கம்பு நேப்பியர் புல் கோ (CN) 4/5<br>தீவனச்சோளம் - CoFS29/31<br>வேலிமசால் | 20சென்ட்<br>15சென்ட்<br>'5சென்ட் |

மேற்கண்ட தீவனப்பயிர் சாகுபடி மாதிரியின் வரப்பு ஓரத்தில் அகத்தி, கிளரிசிடியா மற்றும் சூபாபுல் போன்ற மரவகை தீவனப்பயிர்களை சாகுபடி செய்து வருடம் முழுவதும் பசுந்தீவனம் பெறலாம்.

### கறவை மாடு மற்றும் ஆடுகளுக்கு பசுந்தீவனமளித்தில் :

- கறவை மாட்டிற்கு நாளொன்றிற்கு 25-30 கிலோ பசுந்தீவனம் தேவைப்படுகிறது. 30 கிலோ பசுந்தீவனம் அளிக்கும்போது 20 கிலோ தானிய வகை மற்றும் புல்வகைப் பசுந்தீவனமாகவும், 10 கிலோ பயறு வகை மற்றும் மர இலைகளாகவும் இருக்க வேண்டும்.
- ஆடுகளுக்கு நாளொன்றிற்கு தானிய வகை மற்றும் புல்வகை தீவனங்கள் 2-3 கிலோவும், பயறு வகை தீவனங்கள் 1-2 கிலோவும் அளிக்கலாம்.
- பசுந்தீவனங்களை 2 அங்குல அளவிற்கு துண்டாக நறுக்கிப் போடுவது நல்லது.

### குறிப்பு

1. வேலி மசால், முயல்மசால் மற்றும் சூபாபுல் விதைகளை 80° செ.கி. வெந்நீரில் 5 நிமிடம் விட்டு பின்னர் குளிர்ந்த நீரில் 10 மணிநேரம் ஊற வைத்து பின்பு பிதைப்பு செய்வதால் முளைப்புத்திறன் அதிகரிக்கும்.
2. புதிய கொழுக்கட்டைப்புல் விதைகள் விதை உறக்கத்தில் இருப்பதால் விதைகளை பொட்டாசியம் நைட்ரேட் கரைசலில் 1 லிட்டர் நீருக்கு 10 கிராம் வீதம் 48 மணி நேரம் ஊற வைத்து பின் விதைக்கவும்.


------------------------தொகுப்பு :------------------------

டாக்டர். S. ரமேஷ், M.V.Sc.,

தொழில்நுட்ப வல்லுநர் (கால்நடை அறிவியல்)

முனைவர். T. சுந்தர்ராஜ், M.Sc.,(Agri), Ph.D.,

முதுநிலை விஞ்ஞானி மற்றும் தலைவர்

ICAR - வேளாண்மை அறிவியல் மையம்,

எலுமிச்சங்கிரி, கிருஷ்ணகிரி - 635 120.



ஸ்ரீ குமரன் ஆப்செட், பைரப்பா தெரு, கிருஷ்ணகிரி. செல் : 92453 63048


ICAR

# தீவனப் பயிர்கள் சாகுபடி
# தொழில் நுட்பங்கள்

IN SERVICE OF RURAL MASS
TNBRD - CHENNAI

பசுந்தீவனப்பயிர்கள் பால் உற்பத்தியின் அடிப்படை எனக்கூறலாம். குறைந்த விளைநிலத்தில் தீவனப்பயிர்களைச் சாகுபடி செய்வதன் மூலம் பசுந்தீவன பற்றாக்குறையையும், நில ஒதுக்கீட பிரச்சனைகளையும் ஓரளவு கட்டுப்படுத்தலாம். கால்நடைகளை பெருமளவு பராமரித்து வரும் சிறு, குறு விவசாயிகளிடம் உள்ள குறுகிய நிலங்களில் அதிகமாக தீவன விளைச்சல் கொடுக்கக்கூடிய தீவனப்பயிர்களை சாகுபடி செய்வது மிகவும் அவசியமாகும்.

### பசுந்தீவன வகைகள் :

1. தானிய வகை தீவனப் பயிர்கள்
2. புல்வகை தீவனப் பயிர்கள்
3. பயறுவகை தீவனப் பயிர்கள்
4. மர வகை தீவனப் பயிர்கள்

### மண்ணின் தன்மை மற்றும் சூழ்நிலைக்கு ஏற்ற தீவனப் பயிர்கள் :

| | | |
|---|---|---|
| 1. களர் மற்றும் உவர் நிலம் | : | கினியாபுல், வேலி மசால், நீர்ப்புல், தட்டைப்பயிறு |
| 2. அமில நிலம் | : | முயல்மசால், தட்டைப்பயிறு, கினியாப்புல் |
| 3. தரிசு நிலம் மற்றும் வரப்பு ஓரங்கள் | : | சூபாபுல், அகத்தி, கிளைரிசிடியா |
| 4. தண்ணீர் தேங்கிய நிலம் | : | நீர்ப்புல் |
| 5. நிழலில் வளரக்கூடியவை | : | கினியாப்புல், டெஸ்மோடியம், தட்டைப்பயிறு |

### புதிய ரக தீவனப் பயிர்கள் :

1. கம்பு நேம்பியர் ஒட்டுப் புல் கோ (BN) 5 (2013)
2. குதிரை மசால் கோ-2 (2013)
3. தீவனச்சோளம் கோ-31 (2014)

கால்நடைகளுக்கு தேவையான சமச்சீரான தீவனத்தை உற்பத்தி செய்ய தானிய வகை தீவனப் பயிர்களான மக்காச்சோளம், சோளத்துடன் பயறு வகை தீவனப்பயிர்களான தட்டை பயிரை 1 : 1 என்ற விகிதத்தில் பயிர் செய்யலாம். மேலும் கம்பு நேப்பியர் ஒட்டுப்புல், கினியாப்புல், கொழுக்கட்டை புல் இவற்றில் ஏதேனும் ஒரு புல்லுடன் பயறு வகை தீவனப் பயிர்களை (வேலி மசால் அல்லது முயல்மசால்) 3:1 விகிதத்தில் பயிர் செய்தும் பால் உற்பத்தியை பெருக்கலாம்.